சோலார் மின்சாரம்
கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்
தொடர்புக்கு
96005 48581

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 181 25.12.2025 THURSDAY MARGAZHI : 10 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 181 25.12.2025 வியாழக்கிழமை மார்கழி : 10 விலை : ரூ.5/-

3 பொருநை அருங்காட்சியகத்தை பார்வையிட அனுமதி நுழைவு கட்டணம் எவ்வளவு?

4 விளையாட்டு வீரர்கள் உயர்நிலைக்கு வரவேண்டும் சித்தையங்கோட்டையில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

2 விவசாயிகளின் வயிற்றிலடிக்கும் திமுக: நயினார் நாகேந்திரன் காட்டம்

# "இந்திய விவசாயிகளுக்கான குரல் இது"

## 100 நாள் வேலை திட்ட ஆர்ப்பாட்டம் குறித்து ஸ்டாலின் பதிவு

சென்னை: டிச.25-

மகாத்மா காந்தி ஊரக வேலை திட்டத்தை மீட்டெடுக்க, 389 இடங்களில் ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்ததாக முதல்வர் ஸ்டாலின் தெரி வித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், "மகாத்மா காந்தி ஊரக வேலை திட்டத்தை (MGNREGA) மீட்டெடுக்கவும், தங்களது வாழ்வாதாரத்தைக் காத்துக்கொள்ளவும் தமிழ்நாடு முழுவதும் 389 இடங்களில் ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்தனர்.

இது தமிழ்நாட்டில் இருந்து ஒலிக்கும் ஒட்டுமொத்த இந்திய விவசாயிகளுக்கான குரல்





என்பதை அண்ணல் காந்தியின் மீது வெறுப்புணர்வோடு செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியாளர்கள் உணர வேண்டும். ஏழைகளின் வாழ்வாதாரத்தை உறுதிசெய்ய வேண்டும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

'மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை சிதைக்கும் விதமாக மத்திய அரசு மேற்கொண்டுள்ள சட்டத் திருத்தத்தை திரும்பப் பெறவும், மத்திய பாஜக அரசின் சதிச் செயலையும், அதற்கு ஒத்துழைத்து தமிழக மக்களுக்கு துரோகம் செய்யும் அதிமுகவையும் கண்டித்தும்' தமிழகம் முழுவதும் இன்று திமுக கூட்டணி கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தின.

இந்தப் போராட்டத்தில் 100 நாள் வேலைவாய்ப்பால் பயன்பெறுபவர்களும் பங்கேற்க ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டங்களில் எம்.பி.க்கள், எம்எல்ஏக்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், கூட்டணி கட்சி யினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் பங்கேற்றனர். இந்தப் போராட்டத்தின்போது தமிழக மக்களை வஞ்சிக்கும் மத்திய பாஜக அரசையும், அதற்கு துணைப் போகும் அதிமுகவை கண்டிப்பதாக முழக்கங்கள் எழுப்பப்பட்டன.



■ திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.எம்.பி.அமித் இ.ஆ.ப., அவர்கள் மண்டலம்3, வார்டு60, கோவில் வழி பேருந்து நிலையம்பின்புறம் உள்ள பகுதியில் குப்பைகளை வகைப்படுத்தி பிரித்தல் இயந்திரம் (Trommel machine) அமைப்பது சம்பந்தமாக பார்வையிட்டு, ஆய்வு மேற்க்கொண்டார். உடன் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

## மாநில அளவில் தங்கப் பதக்கம் வென்ற சேரன் வித்யாலயா மெட்ரிக் பள்ளிக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி வாழ்த்து

சின்னாளபட்டி, டிச.25

திருச்சி மாவட்டம், தொட்டியத்தில் உள்ள கொங்குநாடு பொறியியல் கல்லூரியில் பள்ளி கல்வித்துறை சார்பாக நடைபெற்ற 66வது குடியரசு தின விழா ஹேண்ட்பால் போட்டியில் 17 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான மாநில அளவிலான ஹேண்ட்பால் போட்டியில் சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி அணி தங்கப்பதக்கம் வென்றது. சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி அணி 17 வயதுக்குட்பட்ட சீனியர் மாணவர்களுக்கான அணியில் ஏழாவது முறையாக தங்கப் பதக்கத்தைப் பெற்று மாபெரும் சாதனை படைத்ததை பாராட்டும் வகையில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் மாணவர்களை



அழைத்து வாழ்த்து தெரிவித்து பேசுகையில் திண்டுக்கல் மாவட்டத்தி;ல் குறிப்பாக ஆத்தூர் தொகுதியில் கல்வியிலும், விளையாட்டிலும் சாதனை படைத்துவரும் சேரன் வித்யாலயா மெட்ரிக் பள்ளி நிர்வாகத்தை மனதார பாராட்டுகின்றேன். மாணவர்கள் கல்வியையும், விளையாட்டையும் இரண்டு கண்களாக நினைத்து முன்னேற வேண்டுமென வாழ்த்தினார். நிகழ்ச்சியின் போது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலளார் பிள்ளையார்நத்தம் முருகேசன், பேரூர் கழக திமுக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனராஜ், துணைத் தலைவர் ஆனந்திபாரதிராஜா, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜகணேஸ், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், பேரூர் கழக இளைஞரணி அமைப்பளர் வினோத் ஒச்சப்பன் மற்றும் பேரூர் கழக திமுக நிர்வாகிகள், வார்டு உறுப்பினர்கள், மகளிர் அணியினர் உட்பட பலர் உடனிருந்தனர்.



## கீழசின்னணம்பட்டி கிராமத்தில் ஸ்ரீ சக்தி விநாயகர் கோவில் திருவிளக்கு பூஜை

அலங்காநல்லூர்.டிச.25

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள கீழசின்னணம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சக்தி விநாயகர்கோவிலில் மார்கழி மாதத்தையொட்டிபழனி ஆண்டவர் பாதயாத்திரை குழு குருசாமி பாதயாத்திரைகுழு சார்பாக திருவிளக்கு பூஜையும் பக்தி கிராமிய பாடலும் நடைபெற்றது .

திருவிளக்கு பூஜை35 ஆண்டுகாலம் நடைபெற்று வருகிறது தொடர்ந்து இந்த ஆண்டும்அதேபோல் விநாயகர் கோவில் முன்பு பந்தல் அமைக்கப்பட்டு சுவாமிக்கு பல்வேறு மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது தொடர்ந்து அன்று இரவு 7மணி அளவில் அம்மன் மற்றும் தெம்மாங்கு பாடலுடன் குருசாமி தர்மராஜா, தலைமையிலும் தீர்த்தக்கரைமாரியம்மன் திருக்கோவிலின் ஸ்ரீ நிதி அம்மா, முன்னிலையிலும் திருவிளக்கு பூஜை தொடங்கி நடைபெற்றது. இதில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர்.முன்னதாக விநாயகர் முருகன் அம்மன் சுவாமிகளின் அலங்காரத்தில் சிறுவர்கள் நடனமாடி பக்தர்கள் மற்றும் பொதுமக்களை உற்சாகப்படுத்தினார். தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.



■ மதுரை சொக்கிகுளத்தில் உள்ள ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர்களுக்கான சமூகநீதி விடுதியில் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் கே.ஜே. பிரவீன்குமார் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

## மகாராஷ்டிர உள்ளாட்சித் தேர்தல் உருவானது உத்தவ், ராஜ் தாக்கரே கூட்டணி!

மும்பை: டிச.25-

ஜனவரி 15ம் தேதி நடைபெற உள்ள மகாராஷ்டிரா உள்ளாட்சித் தேர்தலை இணைந்து எதிர்கொள்ளப் போவதாக சிவ சேனா (உத்தவ் தாக்கரே), மகாராஷ்டிரா நவநிர்மாண் சேனா ஆகியவை கூட்டாக அறிவித்துள்ளன.

மகாராஷ்டிராவின் முக்கிய மாநில கட்சிகளாக சிவ சேனா (யுபிடி), மகாராஷ்டிரா நவநிர்மாண் சேனா ஆகியவை விளங்கி வருகின்றன. உத்தவ் தாக்கரேவுக்கும் ராஜ் தாக்கரேவுக்கும் இடையே இருந்த பகை காரணமாக இரு கட்சிகளும் தனித்தே போட்டியிட்டு வந்தன.

இந்நிலையில், வரக்கூடிய மகாராஷ்டிர உள்ளாட்சித் தேர்தலை கூட்டணி அமைத்து எதிர்கொள்வது என இவ்விரு கட்சிகளும் முடிவு




செய்துள்ளன. இதற்கான அறிவிப்பு மும்பையில் இன்று வெளியிடப்பட்டது. மும்பையில் செய்தியாளர்களை கூட்டாகச் சந்தித்த உத்தவ் தாக்கரே மற்றும் ராஜ் தாக்கரே ஆகியோர் இதற்கான அறிவிப்பை வெளியிட்டனர்.

செய்தியாளர்களிடம் பேசிய ராஜ் தாக்கரே, "இன்று நாங்கள் எங்கள் இருவருக்கும் இடையேயான கூட்டணியை அறிவிக்கிறோம். தேர்தலை இணைந்து எதிர்கொள்வோம். மும்பை மேயர் ஒரு மராத்தியராக இருப்பார். அவர் எங்கள் கட்சிகள் இரண்டு கட்சிகளில் ஏதேனும் ஒன்றைச் சார்ந்தவராக இருப்பார். மேலும், நாங்கள் சரத் பவாருடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்" என தெரிவித்தார்.

உத்தவ் தாக்கரே பேசும்போது, "நாங்கள் ஒன்றாக இருப்பதற்காக இணைந்துள்ளோம். மும்பையை அபகரிக்க நினைப்பவர்களை நாங்கள் ஒழித்துக் கட்டுவோம். மராத்தி மக்களிடம் நான் சொல்ல விரும்புவது, நீங்கள் இப்போது பிரிந்து சென்றால், நீங்கள் தோற்கடிக்கப்படுவீர்கள். பாஜகவில் நடப்பதைப் பார்க்க சகிக்க முடியாதவர்களும் எங்களுடன் வரலாம்" என்று தெரிவித்தார்.

இந்த கூட்டணி ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்கது என சிவ சேனா (யுபிடி) மூத்த தலைவர் சஞ்சய் ராவத் தெரிவித்துள்ளார். "இந்த நாள் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நாள். இது தாக்கரேக்களின் தலைமைக்கு வழிவகுக்கும். அவர்களால் மட்டுமே மாநிலத்தை வழிநடத்த முடியும்" என சஞ்சய் ராவத் தெரிவித்தார்.

# விவசாயிகளின் வயிற்றிலடிக்கும் திமுக: நயினார் நாகேந்திரன் காட்டம்



சென்னை, டிச.25-

வாழ்விழந்த விவசாயிகளின் வயிற்றில் திமுக அரசு அடிக்கிறது என தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார். அவரது அறிக்கை: டிட்வா புயலால் பாதிப்படைந்த அனைத்து டெல்டா விவசாயிகளுக்கும் பல வாரங்களாகியும் திமுக அரசு இன்னும் இழப்பீடு வழங்கவில்லை. பழுதடைந்த அரசு தானியக்கிடங்குகளாலும், கொள்முதல் செய்வதில் அரசு காட்டிய அலட்சியத்தாலும் தான் பல டன் நெல்மூட்டைகள் மழையில் நனைந்து முளைப்பு கட்டிப்போயின.

தங்களின் பல மாத உழைப்பு பாழாய்ப்போனதைக் கண்டு கலங்கி நிற்கும் விவசாயிகளுக்கு நேரில் சென்று ஆறுதல் சொல்லாமல், நெற்பயிர்களைப் பார்சலில் கொண்டு வந்து ஆய்வு செய்தார் முதல்வர். ஆய்வு செய்து பல வாரங்களாகியும் விவசாயிகளின் கோரிக்கைக்கு ஏற்ப இழப்பீட்டுத் தொகையை இன்னும் வழங்காமல் திமுக அரசு இழுத்தடிப்பது நியாயமல்ல.''நானும் டெல்டாகாரன்' என மேடையில் முழங்குவதை விட, ஏக்கருக்கு ரூ. 30,000 இழப்பீடு வழங்கி விவசாயிகளின் துயரத்தைத் துடைப்பது தான் சாலச் சிறந்தது என்பதை முதல்வருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்விழந்த விவசாயிகளின் வயிற்றில் திமுக அரசு அடிக்கிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குத் தகுந்த இழப்பீடு வழங்காமல் வஞ்சித்து வரும் திமுக அரசின் அலட்சியமே அக்கட்சியின் ஆட்சி அரியணைக்கு முடிவுரை எழுதப்போகிறது. இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்

# வணிகர்களின் வேதனைக்குரல் உலுக்கியது: சொல்கிறார் ராகுல்



புதுடில்லி, டிச.25-

பெரிய நிறுவனங்களுக்கு தாராளம் காட்டி விட்டு, சிறு, குறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களை முறையற்ற ஜிஎஸ்டி போன்றவற்றால் மத்திய அரசு கட்டிப்போட்டுள்ளதாக காங்கிரஸ் எம்பி ராகுல் குற்றம் சாட்டியுள்ளார். அவரது அறிக்கை: வைசிய சமூகத்தினருடனான வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தையின் போது, எங்களின் தொழில் சரிவின் விளிம்பில் இருப்பதாக அவர்களின் வேதனைக் குரல் உண்மையில் என்னை உலுக்கி விட்டது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிற்கு பெரும் பங்களித்த இந்த சமூகம், தற்போது விரக்தியின் உச்சத்தில் இருக்கிறது. இது ஒரு அபாயத்திற்கான எச்சரிக்கை மணிபெரிய பெரிய நிறுவனங்களுக்கு தாராளம் காட்டி விட்டு, சிறு, குறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களை முறையற்ற ஜிஎஸ்டி போன்றவற்றால் இந்த அரசு கட்டிப்போட்டுள்ளது. இது வெறும் கொள்கை தோல்வி அல்ல. உற்பத்தி, வேலைவாய்ப்பு மற்றும் இந்தியாவின் எதிர்காலத்தின் மீதான நேரடி தாக்குதல். இது மன்னராட்சி எண்ணம் கொண்ட பாஜ அரசுக்கு எதிரான இந்தப் போராட்டத்தில், நாட்டு வர்த்தகத்தின் முதுகெலும்பாக இருக்கும் வைசிய சமூக மக்களுக்கு துணை நிற்பேன், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியாவின் விண்வெளி பயணத்தில் பெருமைமிக்க மைல்கல்; பிரதமர் மோடி பாராட்டு



ஆந்திரா, டிச.25-

'புளூ பேர்ட் செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் நிலை நிறுத்தப்பட்டது, இந்தியாவின் விண்வெளி பயணத்தில் ஒரு பெருமைமிக்க மைல்கல்' என இஸ்ரோ விஞ்ஞானிகளை பிரதமர் மோடி பாராட்டி உள்ளார்.ஆந்திரா மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து நேற்று (டிசம்பர் 24) காலை 8.54 மணிக்கு எல்.வி.எம்., 3 ராக்கெட் வாயிலாக, 'புளூபேர்ட்' செயற்கைக்கோள் விண்ணில் பாய்ந்தது. திட்டமிட்டப்படி துல்லியாக நிலை நிறுத்தப்பட்டது என இஸ்ரோ தெரிவித்தது.இது குறித்து பிரதமர் மோடி வெளியிட்ட அறிக்கைஇந்திய விண்வெளித் துறையில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம். இந்திய மண்ணிலிருந்து ஏவப்பட்ட மிகப்பெரிய செயற்கைக்கோளான அமெரிக்காவின் 'புளூபேர்ட்' லிகூஷிவி3வி6 ராக்கெட் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தியது இந்தியாவின் விண்வெளிப் பயணத்தில் ஒரு பெருமைமிக்க மைல்கல்லைக் குறிக்கிறது.வணிக ரீதியில் ராக்கெட்டுகளை ஏவுவதில், உலக சந்தையில் முக்கிய இடத்தை இந்தியா பிடித்துள்ளது. வளர்ச்சி அடைந்த மற்றும் தன்னம்பிக்கை கொண்ட இந்தியாவை நோக்கிய நமது முயற்சிகளின் பிரதிபலிப்பாகும். நமது கடின உழைப்பாளிகளான விண்வெளி விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களுக்கு வாழ்த்துக்கள். விண்வெளி உலகில் இந்தியா தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இந்திய இளைஞர்களால் இயக்கப்படும் நமது விண்வெளித் திட்டம் மிகவும் மேம்பட்டதாகவும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் மாறி வருகிறது. எல்.வி.எம்., 3 ராக்கெட் செயல்திறனை வெளிப்படுத்துவது வாயிலாக, ககன்யான் போன்ற எதிர்காலப் பணிகளுக்கான அடித்தளங்களை வலுப்படுத்துகிறோம். வணிக ஏவுதள சேவைகளை விரிவுபடுத்துகிறோம். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்

# நேரடி விமானங்கள் இல்லாததால் ஊர் ஊராய் சுற்றும் பயணியர்; டிக்கெட் கட்டணமும் ஏறியதால் அதிர்ச்சி

சென்னை, டிச.25-

பண்டிகை மற்றும் தொடர் விடுமுறை காரணமாக, விமான டிக்கெட் கட்டணம் பல மடங்கு அதிகரித்துள்ள நிலையில், பல நகரங்களுக்கு நேரடி விமானம் கிடைக்காததால், பயணியர் தவித்து வருகின்றனர்.

கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாட்டம் அடுத்தடுத்து வருவதால், பள்ளி கல்லுாரிகளுக்கு தொடர் விடுமுறை அளிக்கப்பட்டு உள்ளது. இதனால், விமான நிலையங்களில் பயணியர் கூட்டம் அதிகரித்துள்ளது. சென்னையில் இருந்து, தமிழகத்தின் மற்ற நகரங்களுக்கு செல்ல, நேரடி விமானங்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லை. பெங்களூரு அல்லது திருவனந்தபுரம் வழியாக திருச்சி, கோவை, மதுரை செல்ல வேண்டிய கட்டாய நிலைக்கு பயணியர் தள்ளப்பட்டுள்ளனர். விமான நிறுவனங்களும், இதை காரணம் காட்டி டிக்கெட் விலையை உயர்த்திஉள்ளன.

குறிப்பாக, சென்னையில் இருந்து துாத்துக்குடி செல்லும் அனைத்து விமானங்களில் நேற்றும், இன்றும் இருக்கைகள் நிரம்பி விட்டன. அதனால், துாத்துக்குடி செல்ல, திருவனந்தபுரம் சென்று அங்கிருந்து மாற வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. டிக்கெட் கட்டணமும் அதிகரித்து, பயண நேரமும் கூடுதலாகி உள்ளது.

மதுரை, திருச்சி, சேலம் ஆகிய நகரங்களுக்கு செல்ல வேண்டிய விமானங்களில், அனைத்து டிக்கெட்களும் காலியாகி விட்டதால், பயணியர் சென்னையி ல் இருந்து, பெங்களூரு வழியாக, மதுரை, திருச்சி, சேலம் செல்ல வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது.

# “என்னை எதிர்த்து அன்புமணி போட்டியிட்டால்” ‘ரெடி’ என்கிறார் ஜி.கே.மணி




விழுப்புரம், டிச.25-

விழுப்புரத்தில் பாமக கவுரவத் தலைவர் ஜி.கே. மணி, நேற்று மாலை செய்தியாளர்களிடம் கூறியதாவது: பாமக மாநில செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டம் சேலத்தில் வரும் 29ம் தேதி நடைபெற உள்ளது.

4 ஆயிரம் பொதுக்குழு உறுப்பினர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. இப்பொதுக்குழுவை அரசியல் கட்சி தலைவர்கள் உற்று நோக்குகின்றனர். இதற்கான பொதுக்குழு இலச்சினையை இங்கு வெளியிடுகிறோம்.

‘இப்படிப்பட்ட பொதுக் குழுவை பாமக தலைமை அறிவிக்கவில்லை’ என அன்பு மணி சொல்லியிருப்பது அநாகரிகமானது. நாடே பாராட்டும் போராளியை (ராமதாஸ்) கொச்சைப் படுத்தி வருகிறார். அன்புமணிக்கு தலைவர் மற்றும் அமைச்சர் பதவி கொடுத்து ஆனந்த கண்ணீர் வடித்த ராமதாஸின் கண்களில், தற்போது வேதனை கண்ணீர் வடிகிறது.

பாமக தலைவராக அன்புமணியின் பதவிக் காலம் 2025ம் ஆண்டு மே மாதத்துடன் முடிந்த நிலையில், 2023ம் ஆண்டு முதல் 2026ம் ஆண்டு வரைதலைவராக நீடிக்கிறேன் என போலி ஆவணங்களை தேர்தல் ஆணையத்தில் தாக்கல் செய்துள்ளார். தலைவராக இல்லாதவர், ‘நான் தான் கட்சி, நான்தான் தலைவர்’ என சொல்லி வருகிறார்.

பாமகவின் அடையாளம் ராமதாஸ்தான். அன்புமணியை சிலர் தவறாக வழி நடத்துகின்றனர். ராமதாஸால் உருவாக்கப்பட்டவர்கள், அவரது பெயரை குறிப்பிட்டு ஒருமையில் பேசு வதை கண்டிக்கிறோம். அவரது வயது என்ன..? அனுபவம் என்ன..? பாமக நிறுவனத் தலைவராக இருந்து, கட்சியை ராமதாஸ் வழி நடத்தி வருகிறார்.

2026ல் வெற்றி கூட்டணியை அமைப்பார். பாமக இடம்பெறும் கூட்டணிதான் ஆட்சியை அமைக்கும். 100க்கும் மேற்பட்ட தொகுதியில் பாமக வலிமையாக உள்ளது. அன்புமணியுடன் சென்றவர்கள் வருத்தப்படுகின்றனர், மன உளைச்சலில் உள்ளனர். திரும்பி வருவதற்கு சிலர் எங்களிடம் பேசி வருகின்றனர். ராமதாஸ் கைதான் ஓங்கி இருக்கும்.

தருமபுரியில், ‘ராமதாஸ்தான் ஆணி வேர்’ என்றோம். ‘அவர்தான் ஆல மரம்’ என விழுப்புரத்தில் கூறுகிறோம். கூட்டணி குறித்து பாமகவுடன் எந்த கட்சிகளும் பேசவில்லை. கட்சியில் தற்போது நெருக்கடி உள்ளது.

பாமக வாக்கு வங்கி, ராமதாஸ் பின்னால் உள்ளது. மாம்பழம் சின்னம் ராமதாஸுக்குதான் கிடைக்கும். பாமகவில் உள்ள பிரச்சினை குறித்து இருவரையும் சமாதானப்படுத்த அதிமுக, பாஜக தரப்பில் எதுவும் பேசவில்லை.

சினிமா துறையில் இருப்ப தால் சங்கத் தேர்தலில் தமிழ் குமரனை துணை முதல்வர் உதயநிதி ஆதரித்திருக்கலாம். அது தொழில். சட்டப்பேரவைத் தேர்தலில் நான் போட்டியிடும் தொகுதியில் அன்புமணி உட்பட யார் போட்டியிட்டாலும் போட்டியிட தயாராக உள்ளேன். நானும், எம்எல்ஏ அருளும் ராமதாஸுடன் இருப்பதால், எங்களை திமுகவின் ஆதரவாளர்கள் என அன்புமணி தரப்பினர் விமர்சிக் கின்றனர்.

இடஒதுக்கீடு போராட்டத்தில் உயிர் தியாகம் செய்த தியாகிகளின் சிவந்த மண் என்பதால், விழுப்புரத்தில் பாமக பொதுக்குழு இலச்சினையை வெளியிடுகிறோம். இவ்வாறு அவர் கூறினார். இந்நிகழ்வில் சேலம் எம்எல்ஏ அருள், மாவட்டச் செயலாளர் புகழேந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்



# போக்சோ வழக்கில் கைதான அரசுப் பள்ளி ஆசிரியர் தருமபுரி சிறையில் உயிரிழப்பு

தருமபுரி, டிச.25-

தருமபுரியில் போக்சோ வழக்கில் கைதாகி சிறையில் இருந்த அரசுப் பள்ளி ஆசிரியர் உடல்நலக் குறைவு ஏற்பட்டு உயிரிழந்தார்.

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி ஒன்றியத்தில் செயல்படும் அரசு உயர்நிலைப் பள்ளி ஒன்றில் சமூக அறிவியல் ஆசிரியராக பணியாற்றியவர் மணிவண்ணன் (55). 9ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக எழுந்த புகாரின்பேரில் பள்ளியின் தலைமை ஆசிரியர் சாந்திமணி கடந்த 15ம் தேதி தருமபுரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

புகாரைத் தொடர்ந்து கடந்த 16ம் தேதி ஆசிரியர் மணிவண்ணன் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தருமபுரி மாவட்ட சிறையில் அடைக்கப்பட்டார். இதற்கிடையில் ஆசிரியர் பணி யிடை நீக்கமும் செய்யப்பட்டார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு சிறையில் ஆசிரியர் மணிவண்ணனுக்கு திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளது. இதையறிந்த சிறை அதிகாரிகள் அவரை உடனே 108 ஆம்புலன்ஸ் மூலம் தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். மருத்துவமனையில் ஆசிரியரை பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியிலேயே அவர் உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர்.

அதைத் தொடர்ந்து அவரது உடல் அரசு மருத்துவமனையின் பிரேத பரிசோதனைக் கூடத்தில் வைக்கப்பட்டது. இந்நிலையில், ஆசிரியர் மணிவண்ணனின் உயிரிழப்பில் சந்தேகம் இருப்பதாகவும் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி உறவினர்கள் நேற்று பிரேத பரிசோதனைக் கூடத்தின் முன்பு திரண்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

எனவே, கூட்டத்தை கட்டுப் படுத்த அதிக எண்ணிக்கையிலான போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இதனிடையே, தருமபுரி முதலாவது குற்றவியல் நீதிமன்ற நீதிபதி சிறையில் கண்காணிப்புக் கேமரா காட்சிகள் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்ததன் அடிப் படையில் அதுகுறித்து தகவலை மணிவண்ணனின் உறவினர்களிடம் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து, பிரேத பரிசோதனைக்கு ஒப்புக் கொண்ட உறவினர்கள், தாங்கள் வலியுறுத்தும் மருத்துவரும் பிரேத பரிசோதனை குழுவில் இடம்பெற வேண்டும் என கோரிக்கை வைத்தனர். அதன்படி பிரேத பரிசோதனை முடிந்து நேற்று இரவு 7 மணியளவில் உறவினர்களிடம் உடல் ஒப்படைக்கப்பட்டது.




# புதிய தொழிலாளர் சட்டத்தொகுப்புகளை எதிர்த்து சிஐடியு சாலை மறியல் போராட்டம்: 15 ஆயிரம் பேர் கைது

சென்னை, டிச.25-

புதிய தொழிலாளர் சட்டத்தொகுப்புகளை திரும்பப்பெற வலியுறுத்தி தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் சிஐடியு தொழிற்சங்கத்தினர் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட 15 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். மத்திய அரசின் புதிய தொழிலாளர் சட்டத்தொகுப்புகளை திரும்பப்பெற வலியுறுத்தி சிஐடியு தொழிற்சங்கம் சார்பில் தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் நேற்று சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது.

மொத்தம் 72 இடங்களில் போராட்டம் நடந்தது. சென்னை கிண்டியில் நடைபெற்ற போராட்டத்துக்கு சிஐடியு மாநில பொதுச்செயலாளர் எஸ்.கண்ணன் தலைமை தாங்கினார். அதேபோல் அண்ணா சாலையில் அகில இந்திய துணைத் தலைவர் அ.சவுந்தர ராசன் தலைமை வகித்தார்.

இதுதவிர மின்ட், அம்பத்தூர் பகுதிகளிலும் மறியல் நடைபெற்றது. போராட்டங்களில் ஈடுபட்டவர்களை போலீஸார் கைது செய்து ஆங்காங்கே உள்ள திருமண மண்டபங்களில் அடைத்தனர். பின்னர் மாலையில் அவர்களை விடுதலை செய்தனர்.

அந்த வகையில் சென்னையில் நடந்த போராட்டங்களில் 1000க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். தமிழகம் முழுவதும் சாலை மறியலில் ஈடுபட்ட 15,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

போராட்டம் குறித்து பொதுச்செயலாளர் எஸ்.கண்ணன், செய்தியாளர்களிடம் கூறியதாவது: தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை எடுத்து வரும் பாஜக அரசு, பின்பற்றக்கூடிய பாசிச, தாராளமய பொருளாதார கொள்கையின் வெளிப்பாடாக இந்த தொழிலாளர் சட்டத்தொகுப்புகளை அமலாக்கியுள்ளது.

ஒரு தொழிலாளிக்கு ஒரு ஆண்டுதான் வேலை என்று சொன்னால் நிச்சயம் அந்த தொழிலாளியின் குடும்பம் முன்னேறாது. இவையெல்லாம் தொழிலாளர் விரோத செயல்களாகும். எனவே இச்சட்ட தொகுப்புகளை உடனடியாகத் திரும்பப்பெற வேண்டும்.

அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும், விவசாயிகள் கூட்டமைப்பும் இணைந்து வரும் பிப்ரவரி 12ம் தேதி மாபெரும் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட கூட்டாக முடிவெடுத்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

# கிறிஸ்துமஸ் அன்று போர் நிறுத்தக் கோரிக்கை நிராகரிப்பு; ரஷ்யாவின் செயலால் போப் 14வது லியோ வேதனை



ரோம், டிச.25-

கிறிஸ்துமஸ் தினத்தன்று போர் நிறுத்தம் செய்யுமாறு விடுத்த கோரிக்கையை ரஷ்யா நிராகரித்திருப்பது வேதனை அளிப்பதாக போப் 14வது லியோ தெரிவித்துள்ளார். கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைனுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே கடந்த 2022, பிப்., முதல் போர் நடைபெற்று வருகிறது. இதனை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் தீவிரமாக முயன்று வருகின்றன. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் கடும் எதிர்ப்பையும் மீறி ரஷ்யா, உக்ரைன் மீதான தாக்குதலை தொடர்ந்து வருகிறது. இதனிடையே, (டிசம்பர் 25) உலகம் முழுவதும் கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடப்பட உள்ள நிலையில், ஒருதினம் மட்டும் போர்களை நிறுத்தி, உலக அமைதியை கடைபிடிக்க வேண்டும் என்று போப் 14வது லியோ கோரிக்கை விடுத்தார். ஆனால் போப்பின் இந்தக் கோரிக்கையை ரஷ்யா நிராகரித்து விட்டது.

இதனால், வேதனை அடைந்த போப் 14வது லியோ ரோமிற்கு அருகே உள்ள காஸ்டல் கண்டால்போ இல்லத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது, அவர் கூறியதாவது; கிறிஸ்துமஸ் தினத்தன்று போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை ரஷ்யா நிராகரித்திருப்பது எனக்கு வேதனையளிக்கிறது. எங்கள் கடவுளின் பிறந்த நாளில் குறைந்தபட்சம் ஒரு நாளாவது, சமாதானத்தை கடைபிடிக்க வேண்டும் என்று நல்லெண்ணம் கொண்ட அனைவருக்கும் மீண்டும் கோரிக்கை விடுக்கிறேன். இந்தக் கோரிக்கையை அவர்கள் கேட்பார்கள் என்று நம்புகிறேன். உலகம் முழுவதிலும் 24 மணிநேர சமாதானம் நிலவும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது, இவ்வாறு அவர் கூறினார்.இந்த மாதத்தின் துவக்கத்தில் போப் 14வது லியோ உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை சந்தித்தார். அப்போது, உக்ரைனுக்கு வருமாறு போப்புக்கு அவர் அழைப்பு விடுத்தார். ஆனால், ' இது எப்போது சாத்தியமாகும் என்று சொல்ல முடியாது,' என்று போப் 14வது லியோ பதிலளித்திருந்தார்.

# திண்டிவனம் புதிய பேருந்து நிலையத்துக்கு இந்திரா காந்தி பெயரையே சூட்ட வேண்டும் : செல்வப்பெருந்தகை



சென்னை, டிச.25-

திண்டிவனம் புதிய பேருந்து நிலையத்துக்கு முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் பெயரையே சூட்ட வேண்டுமென்ற கோரிக்கையை முதல்வர் ஸ்டாலின் பரிசீலிக்க வேண்டுமென தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு. செல்வப்பெருந்தகை வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சென்னை திண்டிவனம் நெடுஞ் சாலையில் ரூபாய் 25 கோடி செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையத்திற்கு பெயர் வைப்பதில் சில பிரச்சினைகள் எழுந்துள்ளன. நீண்டகாலமாக திண்டிவனம் பேருந்து நிலையத்திற்கு முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி பேருந்து நிலையம் என்று பெயர் சூட்டப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது.

புதிய பேருந்து நிலையத்தை அமைக்கிற போது பழைய பெயரையே சூட்டுவது தான் மரபாகும். அந்த மரபை மீறுகிற வகையில் வேறொரு பெயரை சூட்டுவது எவ்வகையிலும் நியாயமல்ல. கடலூர் மக்களவை உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத் புதிய பேருந்து நிலையத்திற்கு முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் பெயரை சூட்ட வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி எனக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

1980 ஆம் ஆண்டு மக்களவை தேர்தலின் போது நேருவின் மகளே வருக, நிலையான ஆட்சி தருக என்று எந்த இந்திரா காந்தியை வரவேற்று கருணாநிதி உரையாற்றினாரோ அதை பெருமைப்படுத்துகிற வகையில், முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் பெயரையே புதிய பேருந்து நிலையத்திற்கு சூட்ட வேண்டுமென்ற கோரிக்கையை தமிழ்நாடு முதல்வர் மு.க ஸ்டாலின் பரிசீலிக்க வேண்டுமென அன்போடு கேட்டுக் கொள்கிறேன்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்



# அசாம் மாநிலத்தில் பெரும் கலவரம் 2 பேர் உயிரிழப்பு; 58 போலீஸார் படுகாயம்

குவாஹாட்டி, டிச.25-

அசாம் மாநிலத்தின் கர்பி ஆங்லாங் பகுதியில் நேற்று 2வது நாளாக பெரும் கலவரம் ஏற்பட்டது. இதில் ஐபிஎஸ் அதிகாரிகள் உட்பட 58 போலீஸார் காயம் அடைந்தனர். இன்டர்நெட் சேவையும் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் பதற்றம் நிலவுகிறது.அசாம் மாநிலத்தில் கர்பி பழங்குடியினரின் அமைப்புகளின் தன்னாட்சி கவுன்சில் எல்லைக்கு உட்பட்ட அரசு மேய்ச்சல் நிலங்களில் பிஹார் மற்றும் நேபாளத்தைச் சேர்ந்த பலர் குடியேறி உள்ளனர். அவர்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும் என்று கர்பி பழங்குடியினத்தவர்கள் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர். தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி மேற்கு கர்பி ஆங்லாங்கின் பெலங்பி என்ற பகுதியில் கடந்த 2 வாரங்களாக பழங்குடியினர் 9 பேர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். அவர்களின் உடல்நிலை மோசம் அடைந்ததை தொடர்ந்து கடந்த திங்கட்கிழமை அவர்களை மருத்துவ சிகிச்சைக்காக போலீஸார் வலுக்கட்டாயமாக குவாஹாட்டிக்கு அழைத்துச் சென்றனர். இதனால் ஆத்திரம் அடைந்த பழங்குடியினத்தவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில், 2வது நாளாக நேற்று போராட்டம் நடைபெற்றதுகர்பி பகுதிகளில் இருந்த வாகனங்களை தீ வைத்து கொளுத்தினர். கடைகளில் இருந்து சமையல் காஸ் சிலிண்டர்களை வெளியில் போட்டு வெடிக்க செய்தனர். கலவரத்தை அடக்க வந்த போலீஸார் மீது அம்புகள் எய்தனர். கற்களை வீசியும் தாக்குதல் நடத்தினர். இதனால் நிலைமை கட்டுக் கடங்காமல் போனது. போலீஸார் கண்ணீர் புகை குண்டுகள் வீசி கும்பலை கலைக்க முயற்சித்தனர். இதில் 2 பேர் உயிரிழந்தனர்.அவர்களில் ஒருவர் கர்பி இனத்தைச் சேர்ந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. கரோனி மார்க்கெட் பகுதியில் பெங்காலி ஒருவர் உயிரிழந்துள்ளார். பொதுமக்களில் எத்தனை பேர் காயம் அடைந்துள்ளனர் என்ற விவரம் வெளியாகவில்லை. மேலும் ஐபிஎஸ் அதிகாரிகள் உட்பட 58 பேர் படுகாயம் அடைந்தனர்.

அவர்கள் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டனர். கலவரம் பெரிதானதால், கர்பி ஆங்லாங் மற்றும் மேற்கு கர்பி ஆங்லாங் ஆகிய 2 மாவட்டங்களில் இன்டர்நெட் சேவை துண்டிக்கப்பட்டது.

# முதல்வர் ஸ்டாலினுடன் ப.சிதம்பரம் சந்திப்பு



சென்னை, டிச.25-

முதல்வர் மு.க.ஸ்டாலினை அவரது இல்லத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் நேற்று சந்தித்து பேசினார். தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கு இன்னும் 3 மாதங்களே உள்ளன.இதையடுத்து, கூட்டணி, தொகுதி பங்கீடு, விருப்ப மனு வாங்குவது, பிரச்சாரம், பொதுக்கூட்டங்கள் நடத்துவது என அனைத்து கட்சியிலும் தேர்தல் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. தமிழக காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை, திமுகவுடன் கூட்டணி உடன்பாடு வைத்து, தொகுதி பங்கீட்டை விரைவாக முடிக்க வேண்டும் என்பதற்காக கூட்டணி பேச்சுவார்த்தை குழு அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், திமுகவில் அடுத்த மாதம் தான் பேச்சுவார்த்தை குழு அமைக்கப்பட இருப்பதால், அதன் பிறகே தொகுதி பங்கீடு குறித்து பேச முடியும் என திமுக மேலிடம் தெரிவித்துள்ளது. அதிகாரத்தில் பங்கு கோரிக்கை: இதனால், காங்கிரஸுக்கு எத்தனை தொகுதிகள் கிடைக்கும் என்பதை இன்னும் கணிக்க முடியாமல் உள்ளனர். அதேநேரத்தில் ஆட்சி அதிகாரத்தில் பங்கு அவசியம் என்று காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் கூறி இருக்கிறார்.

இந்நிலையில், முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், முதல்வர் ஸ்டாலினை அவரது இல்லத்தில் நேற்று சந்தித்து பேசினார்.சுமார் 15 நிமிடம் நடைபெற்ற இந்த சந்திப்பில் சட்டக் கல்லூரி தொடங்குவது குறித்து ப.சிதம்பரம் பேசியதாக தகவல் வெளியாகி உள்ளது. அதே நேரத்தில் கூட்டணி குறித்தும் அவர் பேசியதாகக் கூறப்படுகிறது.

# பொருநை அருங்காட்சியகத்தை பார்வையிட அனுமதி நுழைவு கட்டணம் எவ்வளவு?



திருநெல்வேலி, டிச.25-

திருநெல்வேலி ரெட்டியார்பட்டி பகுதியில் திறக்கப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தை பொதுமக்கள் பார்வையிட நேற்றுமுதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக பெரியவர்கள், சிறியவர்களுக்கு நுழைவு கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் பொருநை ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, துலுக்கர் பட்டி ஆகிய தொல்லியல் தளங்களில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட அரிய தொல்பொருட்களை, ரெட்டியார் பட்டியில் அமைக்கப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தியுள்ளனர்.

இந்த அருங்காட்சியகத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 20ம் தேதி திறந்து வைத்தார். இதை பொதுமக்கள் பார்வையிட நேற்று முதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில், திருநெல்வேலி சந்திப்பு பேருந்து நிலையத்திலிருந்து கொக்கிரகுளம், வண்ணார்பேட்டை, பாளை.

பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையம், சாராள் தக்கர் கல்லூரி சாலை, ஜோஸ் பள்ளி விலக்கு வழியாக பொருநை அருங்காட்சியகத்துக்கு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

நுழைவு கட்டணம் நிர்ணயம்: அருங்காட்சியகத்தை பார்வையிட பெரியவர்களுக்கு ரூ.20, சிறியவர்களுக்கு ரூ.10 , மாணவ, மாணவியருக்கு ரூ.5, வெளிநாட்டு பெரியவர்களுக்கு ரூ.50, வெளிநாட்டு சிறியவர்களுக்கு ரூ.25, 5D தியேட்டர் (ஐந்திணை) ரூ.25, VR (7D) BOAT SIMULATOR MOVEMENTS ரூ.25, கேமரா எடுத்துச் செல்வதற்கு ரூ.30, வீடியோ கேமராவுக்கு ரூ.100 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை செயல்படும். மாலை 6 மணிக்கு மேல் நுழைவுச்சீட்டு வழங்கப்படாது. செவ்வாய்கிழமை மற்றும் தேசிய விடுமுறை நாட்களில் விடுமுறை அளிக்கப்படும். தொடக்க நாளான நேற்று காலை முதல் ஏராளமான பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் ஆர்வத்துடன் அருங்காட்சியகத்திற்கு வருகை தந்து, அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட அரிய தொல்பொருட்களை பார்வையிட்டனர்.

ஆதிச்சநல்லூர் கட்டிடத்தில் முதுமக்கள் தாழிகள், தங்க நகைகள், வெண்கலப் பொருட்கள், இரும்பு ஆயுதங்கள், தங்க நெற்றிப் பட்டை, வெண்கல வடிகட்டி, அலங்கார கிண்ணங்கள் போன்ற பொருட்கள் பார்வையாளர்களை கவர்கின்றன.

சிவகளை கட்டிடத்தில் கருப்பு சிவப்புப் பானைகள், கருப்பு சிவப்புப் பானையோடுகள், ஈமத்தாழிகள், உயர் வெண்கலத்தாலான கலன்கள், இரும்பாலான கருவிகள், படையல் கலன்கள், பலவண்ண மட்கலன்கள், குறியீடு பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், தமிழி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் போன்றவை இடம் பெற்றுள்ளன.

கொற்கை கட்டிடத்தில் தமிழ் பிராமி எழுத்து அமைந்த பானை ஓடு, சங்கு வளையல்கள், சங் குக் குறி யீ டுகள் கொண்ட பானை ஓடுகள், கொற்கைத் துறைமுகம் குறித்த குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

து லு க்கர்பட்டி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட வெள்ளி முத்திரையிடப்பட்ட நாணயம், தந்தத்தினால் ஆன பொருட்கள், கண் ணாடி (ஆடி) மணிகள், சுடுமண் மணிகள், சூதுபவளம், அகேட், செவ்வந்தி, பளிங்கு ஆகியவற்றால் செய்யப்பட்ட அரிய கல்மணிகள், பல்வேறு வகையான இரும்புப் பொருட்கள், சுடுமண்ணால் ஆன உருவங்கள் மற்றும் சக்கரங்கள் வைக்கப்பட்டுள்ளன.

தமிழ் எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும் இங்கு கிடைக்கப் பெற்றுள்ளதும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. நிகழ்த்து கலைகளைக் காணும் திறந்த வெளி அரங்கம், தொல்லியல் மாதிரிகள் மற்றும் உள்ளூர்க் கைவினைப் பொருட்களின் விற்பனையகம், மின்கலத்தால் இயங்கும் வாகனம், பொதுமக்கள் செல்ல எளிதான நடைபாதை, இயற்கையை ரசிக்க ஆங்காங்கே மரங்கள், குறுஞ்செடிகள், குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு அம்சங்கள், இளைப்பாற ஆங்காங்கே இருக்கைளும் அமைக்கப்பட்டு தமிழ்நாட்டின் தொன்மையை அறிய அறிவியலோடும், இயற்கையோடும் இணைந்து அனைவரும் கண்டுகளிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.




■ மதுரை அலங்காநல்லூரில்அதிமுக சார்பில்எம்ஜிஆர் நினைவு நாளை முன்னிட்டு அதிமுக நகர் கழகம் சார்பில் நகர செயலாளர் அழகுராஜ் தலைமையில் அவரது படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவிமரியாதை செலுத்தப்பட்டது. இதில் அண்ணா தொழிற்சங்க ஒன்றிய செயலாளர்சுந்தர்ராஜன் நகர பொருளாளர்சுந்தரராகவன்நகர இணை செயலாளர் புலியம்மாள் வார்டு செயலாளர்கள்வலசைகார்த்திக்வெள்ளைகிருஷ்ணன்குருணிபாஸ்கரன்,பாண்டியன்,உள்ளிட்ட பாலர் கலந்து கொண்டனர்.



■ திண்டுக்கல் கி.வெள்ளோடு பகுதியை சேர்ந்த பிரியதர்ஷன்(30) என்பவருக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்பு திருமண உதவித் திட்டத்தின் கீழ் உதவித்தொகையை தருவதற்குதிண்டுக்கல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டார இயக்க மேலாண்மை அலுவலகத்தில் விரிவாக்க அலுவலராக பணியாற்றும் உமாராணி ரூ.3000 லஞ்சம் வாங்கினார்அப்போது திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு டி.எஸ்.பி. நாகராஜ் தலைமையிலான லஞ்ச ஒழிப்பு போலீசார் உமாராணியை கையும் களவுமாக பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர்

# 100 நாள் வேலைத் திட்டத்தை முடக்க நினைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து பித்தளைப்பட்டி பிரிவில் திமுக கூட்டணி கட்சிகள் சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



சின்னாளபட்டி, டிச.25-

வரம் கொடுக்கும் தெய்வம் போல் ஆத்தூர் தொகுதி மக்களை காப்பாற்றும் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் 2026 சட்டமன்ற தேர்தலில் மீண்டும் ஒரு வரலாற்று சாதனை படைக்க வேண்டும் பொதுக்குழு உறுப்பினர் அக்பர் பேச்சு

நூறு நாள் வேலைத் திட்டத்தை முடக்க நினைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து பித்தளைப்பட்டி பிரிவில் திமுக கூட்டணி கட்சிகள் சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பேசிய திமுக பொதுக்குழு உறுப்பினர் அக்பர் வரம் கொடுக்கும் தெய்வம் போல் ஆத்தூர் தொகுதி மக்களை காப்பாற்றும் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் 2026 சட்டமன்ற தேர்தலில் மீண்டும் ஒரு வரலாற்று சாதனை படைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

நூறு நாள் வேலைத்திட்டத்திற்கு பெயர் மாற்றம் செய்தும், தமிழகத்தில் வேலையில்லா திண்டாட்டத்தையும், கிராம ஊராட்சிகளில் வறுமையை ஏற்படுத்தவும் அதற்காக 100 நாள் வேலைத்திட்டத்தை முடக்க நினைக்கும் மத்தியில் ஆளும் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஆத்தூர்; கிழக்கு ஒன்றியம் சார்பாக பித்தளைப்பட்டி பிரிவில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் தலைமை தாங்கினார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வி.கே.முருகன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ராஜாமணி, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மச்சக்காளை, விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த தண்டபாணி, தமிழக வாழ்வுரிமை கட்சியைச் சேர்ந்த வேளாங்கண்ணி, பாலமுருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக துணைச் செயலாளர் எம்.சி.பாண்டியன் வரவேற்று பேசினார். ஆர்ப்பாட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திமுக மாநில பொதுக்குழு உறுப்பினர் கே.எஸ்.அக்பர் பேசும்போது இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழகம் உள்ளது. நூறு நாள் வேலைத் திட்டம் மூலம் கிராமங்களில் வறுமை ஒழிக்கப் பட்டுள்ளது. கந்துவட்டி கொடுமை இல்லாநிலை உருவாகியுள்ளது. இதைப் பொறுக்காத மோடி தலைமையிலான ஒன்றிய அரசு தமிழகத்தில் நூறு நாள் வேலைத் திட்டத்தை முடக்கி உங்களை வறுமையில் தள்ளப்பார்க்கிறது. இது ஒரு போதும் தமிழகத்தில் நடக்காது என்றார். ஆத்தூர் தொகுதியில் மக்களோடு மக்களாக பழகிவரும் தென்பாண்டி சிங்கம் ஐ.பி.யார் அவர்கள் மனதில் 24 மணி நேரமும் ஆத்தூர் தொகுதியின் வளர்ச்சிதான் இருக்கிறது. ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய துணைச் செயலாளர்கள் ராஜேந்திரன், வசந்தாகென்னடி, சின்னாளபட்டி பேரூர் கழக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் செட்டியபட்டி ராஜா, உலகநாதன், ஆறுமுகம், மாவட்ட விவசாய அணியைச் சேர்ந்த பி.என்.போஸ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜகணேஷ், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன் சின்னாளபட்டி பேரூராட்சி மன்ற முன்னாள் துணைத்தலைவர் எம்.வி.முருகன், அரசு ஒப்பந்ததாரர்கள் ஜீசஸ் அகஸ்டீன் மெல்வின், சின்னாளபட்டி பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர் வினோத் ஒச்சப்பன், மாணவரணி அமைப்பாளர் மெடிக்கல் கோபி, மற்றும் பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் பேரூர் கழக கிளைச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




## வயல் வெளியில் வேலை செய்த தொழிலாளர்களுக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்து அன்பு அறம் தொண்டு அறக்கட்டளை

தேனி டிச.25-

தேனி மாவட்டம் கம்பம் அருகே உள்ள சுருளிபட்டியில் வயல்களில் அன்பு அறம் தொண்டு அறக்கட்டளை சார்பாக அன்பு ராஜா, ரூபாஈஸ்வரி மற்றும் வேளாண்மை கல்லூரி மாணவ மாணவிகள் சார்பாகவும் வயல் வெளியில் நடவுப்பணி செய்து கொண்டிருந்த விவசாய தொழிலாளர்களை கௌரவிக்கும் விதமாக பொன்னாடை வழங்கி கௌரவப்படுத்தினர்.இந்த நிகழ்ச்சியில் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவிகள் வெ.தமயந்தி, மு. சுருதிகா, நா. ஸ்ரீநீதி, மு. பிர்னாஸ் பர்வீன், ச.அன்புமொழி, ஜெ.மது ரஞ்சனா, செ.ஷர்மிளா கலந்து கொண்டு விவசாய முறைகளை கற்றுக் கொண்டனர்.

இவர்களுடன் தோட்டக்கலை கல்லூரி திண்டுக்கல் மாவட்டம் செம்பட்டி ஆர்.வி.எஸ். பத்மாவதி மாணவர்கள் ச.தினேஷ்குமார், நா.மணிபாரதி, மு.அஸ்விந்த் ராகவ், ப.ஜெய்சூர்யா, ம.வீரமணிராஜ், மா.பார்த்தசாரதி, ஸ்ரீ. பிரியதர்ஷன், மு.அரவிந்த், பெ.தமிழரசன் ஆகியோ கலந்து கொண்டனர். மேலும் விவசாயிகளை கௌரவித்த மாணவர்களை விவசாயிகள் வாழ்த்தி அனுப்பினர்.

## 20 அதிநவீன குளிர்சாதன அரசு சொகுசு பேருந்துகள் கொடியசைத்து தொடங்கி வைத்தார் ஸ்டாலின்



சென்னை, டிச.25-

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு ரூ.34.30 கோடி மதிப்பிலான பல அச்சுகள் (MULTI-AXLE) கொண்ட 20 அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்துகள் இயக்கத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தி அறிக்கை: தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (24.12.2025) போக்குவரத்துத் துறை சார்பில் சென்னை, தீவுத்திடல் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 34.30 கோடி ரூபாய் மதிப்பிலான பல அச்சுகள் (MULTI-AXLE) கொண்ட 20 அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்துகள் இயக்கத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இப்பேருந்து சேவை தமிழ்நாடு போக்குவரத்து துறை மூலமாக முதல் முறையாக தமிழ்நாட்டின் பல்வேறு தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், அரசு போக்குவரத்துக் கழக பொன்விழாவையொட்டி 1,05,778 ஊழியர்களுக்கு 3.33 கோடி ரூபாய் மதிப்பிலான சுவர் கடிகாரங்கள் வழங்கும் நிகழ்வினை 10 ஊழியர்களுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்.

புதிய பேருந்தின் சிறப்பம்சங்கள்: அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய பல அச்சுகள் (MULTI-AXLE) கொண்ட 20 அதிநவீன குளிர்சாதன வசதி கொண்ட புதிய பேருந்தில்:

பயணிகளுக்கு உயர்தர மற்றும் வசதியான இருக்கை அமைப்பு 2வூ2 சீட்டிங் அமைப்புடன் அதிகபட்சம் 51 வசதியான இருக்கைகள், வெளிப்புற காட்சியை ரசிக்க விசாலமான Panoramic ஜன்னல்கள், உயர்தர மேல்நிலை பொருட்கள் வைக்குமிடம் (Overhead Luggage Compartment);UNOMINDA (Harita) VFX09 உயர்தர இருக்கைகள் Calf Support வசதியுடன் கூடிய இருக்கைகள், இரட்டை USB Mobile Charging Ports, பத்திரிகைகள், பாட்டில் ஹோல்டர், காலணி வைக்கும் இடம்;

வசதியான மற்றும் பாதுகாப்பான ஓட்டுநர் கேபின் மனித உடல் அமைப்பிற்கு ஏற்ற Ergonomic Control Layout, வளைந்த வடிவ Dashboard, Air-Suspension கொண்ட ஓட்டுநர் இருக்கை, முழங்கால் பாதுகாப்பு அமைப்பு (Knee Impact Protection System);

மேம்பட்ட PX Suspension System - மேம்பட்ட Steering Stability, Air Springகளில் குறைந்த அழுத்தம், Shock Absorber System. EVSC, ESP, ASR உள்ளிட்ட மேம்பட்ட பிரேக்கிங் மற்றும் பாதுகாப்பு அமைப்புகள், பயணிகள் பாதுகாப்பை முன்னிலைப்படுத்தும் b பாதுகாப்பு அமைப்பு, அவசரநிலையில் விரைவாக பயணிகளை வெளியேற்ற அகலமான Roof Escape Hatch, முன், பின் மற்றும் பக்க மோதல்களில் தாக்கத்தை குறைக்கும் FUP / FIP / SUPD பாதுகாப்பு அமைப்புகள், மேம்பட்ட Rollover & Pedestrian பாதுகாப்பு வசதி;

சுற்றுச் சூழல் பாதுகாப்பு அம்சங்கள் BS-VI Emission Norms-க்கு முழுமையான இணக்கம், EGR + SCR தொழில்நுட்பம் மூலம் NOx - Emission குறைப்பு மற்றும் குறைந்த கார்பன் உமிழ்வு, அதிக வலிமையான Monocoque / Reinforced Body Structure, நீண்ட ஆயுட்காலத்திற்கான Anti-Corrosion Treatment, அவசரகாலத்தில் பயணிகள் வெளியேறுவதற்கு அவசரகால வெளியேறும் வழி, விபத்துகளை தவிர்த்திட வாகனத்தின் முன் மற்றும் பின் பகுதிகளில் கேமராக்கள், வாகன செயல்திறன் மற்றும் கோளாறுகளை உடனுக்குடன் கண்டறிய Electronic Diagnostic Control வசதி, ரிவர்ஸ் சென்சார் வசதி மற்றும் கேமரா, வாகனத்தை கண்காணித்திட Bus Tracking System வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் இப்பேருந்துகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஊழியர்களுக்கு சுவர் கடிகாரங்கள்: பேருந்து போக்குவரத்தை நாட்டுடைமையாக்கும் வகையில் தமிழ்நாடு அரசால் அரசு போக்குவரத்து கழகங்கள் தொடங்கப்பட்டு 50ஆம் ஆண்டு (1976 2025) பொன்விழா நடைபெற்று வருவதையொட்டி போக்குவரத்து கழகங்களில் பணியாற்றி வரும் 1,05,778 ஊழியர்களுக்கு 3.33 கோடி ரூபாய் மதிப்பிலான சுவர் கடிகாரங்கள் வழங்கிடும் விதமாக முதல்வர் மு.க. ஸ் டாலின், இன்று 10 போக்குவரத்து ஊழியர்களுக்கு சுவர் கடிகாரங்களை வழங்கி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா. சி. சிவசங்கர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்



## சின்னமனூர் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

தேனி டிச.25-

சின்னமனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கி100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பாஜக அரசையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய அரசு தொடர்ந்து தமிழக மக்களை வஞ்சித்து வருவதோடு தற்பொழுது 100 நாள் வேலையை திட்டத்தில் கை வைத்து உள்ளது இந்த 100 நாள் வேலை திட்டத்தை நம்பி ஊராட்சியில் ஏழையீரல் பொதுமக்கள் வாழ்ந்து வருவதை வயிற்றில் அடித்து பாழாக்கும் விதமாக தற்பொழுது வரை படங்களை அனுப்பாமல் ஏமாற்றி வருகிறது இதை வன்மையாக கண்டிக்கிறது மதச்சார்பற்ற கூட்டணி

தொடர்ந்து கூட்டத்தில் பங்கேற்ற பெண்கள் பிஜேபி அரசை கண்டிக்க விதமாக போஸ்டர்கள் பாதகைகள் வைத்து கோஷங்கள் எழுப்பினர். தொடர்ந்து கம்பம் சட்டமன்ற உறுப்பினர் துண்டு பிரசுரம் பொது மக்களுக்கு வழங்கினார்

இந்த ஆர்ப்பாட்டத்தில் ழிகம்பம் சட்டமன்ற உறுப்பினர் ராமகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் சின்னமனூர் ஒன்றிய செயலாளர் அண்ணாதுறை முன்னிலையில் நடைபெற்றது.

. இந்நிகழ்வில் மத்திய ஒன்றிய அரசை கண்டித்து கோசங்கள் எழுப்பப்பட்டது.


தொடர்ந்து காங்கிரஸ் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆதித்தமிழர் பேரவை மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டு கண்டன உரை ஆற்றினர்..இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு கையில் மோடிக்கு எதிரான வாசகங்களுடன் கையில் பதாகை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.



## ஒட்டன்சத்திரம் தவெக நகர செயலாளர் எம்.குருஅருண் தலைமையில் பகுத்தறிவு பகலவன் பெரியார் அவர்களின் 52வது நினைவு தினம் அனுசரிப்பு

ஒட்டன்சத்திரம் டிச.25-

தமிழக வெற்றிக் கழகம் திண்டுக்கல் மேற்கு மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகரம் சார்பாக நேற்று 24.12.2025 தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கை தலைவர்களின் ஒருவரான பகுத்தறிவு பகலவன் பெரியார் அவர்களின் 52வது நினைவு நாளை முன்னிட்டு ஒட்டன்சத்திரம் நகர செயலாளர் எம்.குருஅருண் அவர்கள் தலைமையில் நகர துணைச் செயலாளர் செந்தில்குமார் அவர்கள் ஏற்பாட்டில் தாராபுரம் சாலை பழனி மெயின்ரோடு அருகில் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செய்தனர். இதில் ஒட்டன்சத்திரம் நகரம் தலைமை நிர்வாகிகள், ஒட்டன்சத்திரம் ஒன்றியம், தொப்பம்பட்டி ஒன்றியம், மாவட்ட மகளிரணி,நகர வார்டு செயலாளர்கள், இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் கிளை கழக செயலாளர்கள் அனைவரும் கலந்துகொண்ட



## எம்ஜிஆர் அவர்களின் 38 ஆம் ஆண்டு நினைவு தினம்

திருப்பூர், டிச.25-

திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினருமான சி. மகேந்திரன் அவர்களின் வழிகாட்டுதல் படி தமிழக முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்ஜிஆர் அவர்களின் 38 ஆம் ஆண்டு நினைவு தினம் போடி பட்டி அ. இ. அதிமுக கிளை கழகம் சார்பாக உடுமலை தெற்கு ஒன்றிய கழக செயலாளர் போகநாதன் அவர்கள் தலைமையில் எம்ஜிஆர் திரு உருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் போடிபட்டி அதிமுக கழக பொறுப்பாளர் வே. ரமேஷ் என்ற ராமசாமி, கிளைக் கழகச் செயலாளர் நாகமுத்து, விஜயகுமார் மற்றும் பாஜக கூட்டணி கட்சி நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சி போடிபட்டி பஸ் ஸ்டாப் அருகில் நடைபெற்றது.



## ஒட்டன்சத்திரம் தவெக நகர செயலாளர் எம்.குருஅருண் தலைமையில் பெரியார் 52வது நினைவு தினம் அனுசரிப்பு

ஒட்டன்சத்திரம் டிச.25-

தமிழக வெற்றிக் கழகம் திண்டுக்கல் மேற்கு மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகரம் சார்பாக, தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கை தலைவர்களின் ஒருவரான பகுத்தறிவு பகலவன் பெரியார் அவர்களின் 52வது நினைவு நாளை முன்னிட்டு, ஒட்டன்சத்திரம் நகர செயலாளர் எம்.குருஅருண் அவர்கள் தலைமையில், நகர துணைச் செயலாளர் செந்தில்குமார் அவர்கள் ஏற்பாட்டில், தாராபுரம் சாலை பழனி மெயின்ரோடு அருகில் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தனர். இதில் ஒட்டன்சத்திரம் நகரம் தலைமை நிர்வாகிகள், ஒட்டன்சத்திரம் ஒன்றியம், தொப்பம்பட்டி ஒன்றியம், மாவட்ட மகளிரணி,நகர வார்டு செயலாளர்கள், இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் கிளை கழக செயலாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

## விளையாட்டு வீரர்கள் உயர்நிலைக்கு வரவேண்டும் சித்தையங்கோட்டையில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு



சின்னாளபட்டி டிச. 25-

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் மேற்கு மற்றும் தெற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட கிராம ஊராட்சிகள் மற்றும் சித்தையங்கோட்டை, அய்யம்பாளையம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களின் நலன் கருதியும், அப்பகுதியைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்களின் நலன் கருதியும், 100கிரிக்கெட் குழுவினருக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் சொந்த செலவில் கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கும் விழா. சித்தையங்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு ஒன்றிய செயலாளர் இராமன் தலைமை தாங்கினார் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், சித்தையங்கோட்டை பேரூர் கழக செயலாளர் சக்திவேல், அய்யம்பாளையம் பேரூராட்சி மன்ற தலைவர் ரேகா அய்யப்பன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணலூர் மணிகண்டன், சிறுபான்மை அணியைச் சேர்ந்த செல்லமரைக்காயர், ரபீக்மைதீன், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் காணிக்கைசாமி, பாப்பாத்;தி, செல்விகாங்கேயன், அழகு சரவணகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட பிரதி நிதி சௌந்தரபாண்டி வரவேற்று பேசினார். ஐ.பெரியசாமி அவர்கள், மாணவர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு கிரிக்கெட் உபகரணங்களை வழங்கிவிட்டு அவர்கள் மத்தியில் பேசும்போது, இந்தியாவே திரும்பிப்பார்க்கும் அளவிற்கு தமிழக விளையாட்டு வீரர்கள் உலக அளவில் சாதனை படைத்து வருகிறார்கள். குக்கிராமத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும், விளையாட்டுத் துறையில் சாதனை படைத்து வருகிறார்கள். அதற்கு காரணம் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் செயல்பாடுகளும், சாதனை திட்டங்களும்தான் என்றார். விழாவில் சித்தையங்கோட்டை பேரூராட்சி துணைச் செயலாளர்கள் ஜான், வார்டு உறுப்பினர்கள் லாவண்யாசுரேஷ், தியாகு, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் போடிகாமன்வாடி நாகலெட்சுமி சசிக்குமார், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் நெல்லூர் மலைச்சாமி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வசந்தகுமார், மாணவரணி அமைப்பாளர் சசிகுமார், மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள், வார்டு உறுப்பினர்கள், கிளைக்கழக நிர்வாகிகள் மகளிர் அணியினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000